# மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் - கழகத்தினர் எழுச்சிமிகு வரவேற்பு அளித்த காட்சி!












அனைத்து சமுதாய மக்களால் போற்றப்பட்டவர் தேவர் திருமகனார் என்று திண்டுக்கல் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி அலுவலகத்தில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். அருகில் தேசிய செயலாளர் பி.எஸ்.ஜெயராம் சந்தனத் தேவர் உட்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### பெங்களூரு பேருந்து நிலையத்தில்

## தனியார் சொகுசுப் பேருந்துகள் தீப்பிடித்தது!

பெங்களூரு, அக். 31-

பெங்களூரு வீரபத்ர நகரில் உள்ள பேருந்து நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பேருந்துகள் தீப்பிடித்து எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பெங்களூரு வீரபத்ரா நகரில் உள்ள பேருந்து நிலை யத்தில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. பஸ் டிப்போவில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்துகள் தீயினால் எரிந்து நாசமாகின. பெங்களூரு வீரபத்ரநகர் பேருந்து நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேருந்துகள் தீயில் கருகின. இதுவரை உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முயன்றனர். தீ விபத்துக்கான காரணமும் இன்னும் கண்டறியப்படவில்லை.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 116வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், நேற்று (30.10.2023) சென்னை, நந்தனத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, உறுப்பினர்கள் த.வேலு, தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களில் 'மக்களைத் தேடி மேயர்' சிறப்பு முகாம்கள்!

## மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கைகள்!

### மேயர் திருமதி. ஆர்.பிரியா தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, அக்.31-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களில் நடைபெற்ற மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாம்களில் மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (30.10.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாம்களில் மண்டலங்கள் வாரியாக பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு மேயர் அவர்கள் விரிவாக ஆய்வு செய்து, மக்கள் அளிக்கும் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வு கண்டிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மேயர் தெரிவித்ததாவது :

மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் மீது அலுவலர்கள் தனிக்கவனம் செலுத்தி, பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதை பிரதான நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், தொடர்புடைய துறைகளைச் சார்ந்த மனுக்கள் மீதும் துறை அலுவலர்களுடன் மாநகராட்சி அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு விரைந்து முடித்து, பொதுமக்களின் கோரிக்கைகளை நிறை வேற்றும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

மக்களைத் தேடி மேயர் சிறப்பு முகாம்களில் பொது மக்களிடமிருந்து இதுவரை 30.05.2023 அன்று இராயபுரம் மண்டலத்தில் 333 மனுக்கள் பெறப்பட்டு 331 மனுக்கள் மீதும், 31.05.2023 அன்று திரு.வி.க.நகர் மண்டலத்தில் 241 மனுக்கள் பெறப்பட்டு 190 மனுக்கள் மீதும், 05.07.2023 அன்று அடையாறு மண்டலத்தில் 315 மனுக்கள் பெறப்பட்டு 301 மனுக்கள் மீதும், 10.08.2023 அன்று திருவொற்றியூர் மண்டலத்தில் 235 மனுக்கள் பெறப்பட்டு 179 மனுக்கள் மீதும், 06.10.2023 அன்று அம்பத்தூர் மண்டலத்தில் 516 மனுக்கள் பெறப்பட்டு 190 மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் மீது தொடர்புடைய துறைகளின் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு உரிய தீர்வினை காண அனைத்து அலுவலர்களும் பணியாற்றிட அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், உணவுப் பொருள் வழங்கல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, அரசு கேபிள் டிவி, இசேவை மையம், சென்னை மாநகர காவல்துறை, சமூக நலத்துறை, வருவாய்த்துறை, மகளிர் திட்டம், பொதுப்பணித்துறை, மாநகரப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகரப் போக்குவரத்துத் துறை, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த மனுக்கள் மீது தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு தீர்வினைக் காண அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), எம்.பி.அமித், (தெற்கு), கட்டா ரவி தேஜா, (வடக்கு) மற்றும் தலைமைப் பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள், தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சீரிய முன்னெடுப்பில் நடக்கும் 'நீட் விலக்கு நமது இலக்கு' எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை சென்னை மேற்கு மாவட்டம். அண்ணாநகர் தெற்கு பகுதியில் தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணியின் சார்பில், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில செயலாளர் டி.செங்குட்டுவன், துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் ந.ராமலிங்கம், மாநில துணைச் செயலாளர்கள் உதயசூரியன், ராம்குமார் மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ், மாவட்ட நிர்வாகிகள் குப்புசாமி, முருகன், தட்சிணாமூர்த்தி, முத்துகிருஷ்ணன், ஆனந்தன், ஆனந்தகுமார் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், கழக நிர்வாகிகள் உடன் கலந்து கொண்டனர்.

## கேரளாவில் குண்டு வெடிப்பு!

### எம். எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, அக். 31 -

கேரளாவில் நடைபெற்ற குண்டு வெடிப்பு குறித்து மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கேரள மாநிலம் எர்ணாகுளம் அருகே உள்ள களமசேரியில் ஞாயிறு தோறும் நடக்கும் கிறிஸ்தவ மத சிறப்பு ஜெபக்கூட்டம் நடக்கும் இடத்தில் இன்று காலை 9 மணியளவில் மூன்று இடங்களில் பயங்கர வெடி விபத்துகள் நடைபெற்றுள்ளது. இதில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 30க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 7 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல்கள் தெரிகின்றன.

வன்முறை நிகழ்வுகள் அது எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பயங்கரவாத நடவடிக்கையின் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சம்பவத்தில் சிகிச்சை பெற்று வரும் அனைவரும் மிக விரைவில் குணம் பெற்று இல்லம் திரும்ப பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### தாம்பரம் மாநகர திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில்

## மாநகர பிரதிநிதிகள் கூட்டம்!

### மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!



தாம்பரம் மாநகரக் கழகத்தின் சார்பில் மாநகர பிரதிநிதிகள் கூட்டம் நாளை (01.11.2023) மாலை 4 மணி அளவில் மேற்கு தாம்பரம் கோண் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் மாநகர அவை தலைவர் துணை மேயர் கோ.காமராஜ் தலைமையிலும் மாநகர துணைச் செயலாளர்கள் மேயர் க.வசந்தகுமாரி இரா.நரேஷ் கண்ணா.எம்.சி பி.சதாசிவம் மற்றும் மாநகர பொருளாளர் ஏ.விஜயரங்கன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. மேலும் மாநகரத்துக்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மாவட்ட, மாநகர, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** 1.வருகின்ற 5 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை திருவள்ளூரில் நடைபெறுகின்ற பாகநிலை முகவர்கள் (BLA2) கூட்டம்

2.வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு வாக்காளர் சேர்ப்பு நீக்கல் முகாம்களில் கழக பாக நிலை முகவர்களின் களப்பணி குறித்து

3.கழக வளர்ச்சிப் பணி

**எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.**
செயலாளர்
தாம்பரம் மாநகர தி.மு.க.